மடீட்சியாவின் டெக்ஸ் நெக்ஸ் 2019

# மாபெரும் ஜவுளித் தொழில் கண்காட்சி

**அறிக்கை**

கடந்த 18 முதல் 21 வரை – 4 நாட்கள் மடீட்சியா ஹாலில் டெக்ஸ் நெக்ஸ்ட் 2019 – டெக்ஸ்டைல் டெக்னாலஜி கண்காட்சி இந்திய அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் வளர்ச்சி நிறுவனம் (MSME) தேசிய சிறுதொழில் வளர்ச்சி கழகம் (NSIC) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) தமிழ்நாடு தொழில் வணிகத்துறை (DI&C)தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDI) ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

83 அரங்குகள் அமைக்கப்பட்டன. இதில் காட்டன், ஹேண்ட்லூம், டையிங் மிஷின், பட்டு, கைத்தறி, பேப்பர் பைகள், நூல் பைகள், புடவைகள், சணல் பொருடங்கள் ஆகியவை டிஸ்பிளே செய்யப்பட்டிருந்தது. பிளாஸ்டிக் பொருட்கள் மூலம் டி-சர்ட் தயாரிக்கும் ஒரு தொழில் நுட்பம் பார்வையாளர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை மேம்படுத்தும் வகையில் இக்கண்காட்சியில் தமிழ்நாடு கைத்தறி மற்றும் ஜவுளித்துறை இயக்குனரகத்தின் சார்பில் சேலம், ஈரோடு, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், திருநெல்வேலி, நாகர்கோவில, விருதுநகர், திண்டுக்கல், பரமக்குடி, மதுரை ஆகிய ஊர்களிலிருந்து 30 விசைத்தறி நெசவாளர்களர் கூட்டுறவு சங்கங்கள் பங்கு கொண்டு விரிப்புகள், திரைசீலைகள், தலையனை உறை, பட்டு சேலைகள் ஒரிஜினல் காஞ்சிபுரம் பட்டு சேலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. புதிய தொழில் தொடங்குவோர், புதிய ஒரு நபரை அறிமுகமாகுதல், தொழில் வங்கி கடன், ஆலோசனைகள் அனைத்தும் இந்த கண்காட்சியில் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு டி.எஸ். இராஜசேகர்** இ.ஆ.ப. அவர்கள் கண்காட்சி சிறப்பு மலரை வெளியிட்டு கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

21.7.2019 அன்று நடைபெற்ற கண்காட்சி நிறைவு விழாவில் மதுரை மாநகராட்சி ஆணையாளர் **திரு எஸ். விசாகன்** இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு நிறைவு விழா உரையாற்றினார். தமிழ்நாடு சிறு, குறுந்தொழில்கள் சங்கத் தலைவர் திரு எஸ். அன்புராஜன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

4 நாட்கள் நடைபெற்ற கண்காட்சியில் தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து ஜவுளித் தொழில் உற்பத்தியாளர்கள், வணிகர்கள், மூலப்பொருட்கள் விற்பனையாளர்கள், தொழில்முனைவோர்கள் சுமார் 15000 முதல் 20000 பேர் வருகை தந்து கண்காட்சியை பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாடு ஆயத்த ஆடைகள் உற்பத்தியாளர்கள் சங்கம், தென் மாவட்ட சாய ஆலைகள் உற்பத்தி குழுமம், தென் இந்திய ஜவுளி பதப்படுத்துல் குழுமம், மதுரை பின்னலாடை தொழில்கள் சங்கம், செல்லூர் கைத்தறி ஆடைகள் உற்பத்தியாளர்கள் சங்கம், மதுரை ஸ்பின்னர்ஸ் அசோசியேசன், வாடிப்பட்டி டெக்ஸ்டைல் உற்பத்தி குழுமம், நூல் விற்பனையாளர்கள் சங்கம், மதுரை சுங்குடி சேலைகள் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் சுங்குடி சேலைகள் ஸ்கிரீன் பிரிண்டிங் உரிமையாளர்கள் சங்கங்கள் எங்களுக்கு நல்லதொரு ஆதரவளித்து கண்காட்சி வெற்றிக்கு உதவியுள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரங்கம் அமைத்த நிறுவனங்களுக்கு நல்ல வியாபார விசாரனைகளும், வர்த்தக விசாரனைகளும் கிடைத்துள்ளன.

இந்த கண்காட்சியின் சிறப்பான வெற்றிக்கு உழைத்திட்ட கண்காட்சி ஆலோசகர்கள், உதவித் தலைவர்கள், சங்க நிர்வாகிகள், கமிட்டி உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பி வீரப்பன்**
கண்காட்சித் தலைவர்